01.09.2023
O.S.No.171/2015

பி.வா.சா.1 திரு.ராஜன் பாபு த.பெ.தர்மாங்கதன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

வாதிகள் தரப்பு குறுக்கு **விசாரணை**

1. வாதிகள் எனது கொள்ளுபாட்டி மோளபிச்சிக்கு வாரிசுதாரர்கள் என இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகளின் தாயார் பெயர் என்ன என்றால் மோளபிச்சி என்ற முத்தம்மாள். அவரை ராமாயி என்ற முத்தம்மாள் என்றும் அழைப்பார்கள். எனது நிருபண வாக்குமூலத்தில் வாதிகளின் தாயார் பெயர் மோளபிச்சி என்ற முத்தம்மாள் என்றுதான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எனது தாயார் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.1/2012 ல் எத்தனை சொத்துக்கள் தாவா சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனது பாட்டி மோளபிச்சி பெயரில் உள்ள பட்டாவில் காட்டப்பட்ட அனைத்து சொத்துக்களும் காட்டப்பபட்டுளள்து. அந்த சொத்துக்கள் எல்லாம் எனது பாட்டி மோளபிச்சி என்பதற்கு அந்த வழக்கில் எனது தாயார் ஆதாரம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் எனது பாட்டி மோளபிச்சிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு, எனது தாயார் எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அந்த சொத்துக்கள் அனைத்தும் முன்னோர்கள் சொத்து, மோளபிச்சிக்கு பூர்வீக சொத்தாகும்.

2. இந்த வாதிகள் அசல் வழக்கு எண்.1/2012 ல் தரப்பினர்கள் அல்ல என்றால் சரிதான். நான் எனது நிருபண வாக்குமுலத்தில் கூறியுள்ளது போல் அசல் வழக்கு எண்.1/2012 க்கு எதிராக மேல் முறையீடு எதுவும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு தீர்வாகவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.1/2012 ல் எனது தாயார் மோளபிச்சிக்கு, வாரிசுதாரர் என்று கோரிய பரிகாரத்திற்கு இந்த வழக்கில் இந்த வாதிகள் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.1/2012 வழக்கில் இந்த வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 14 இலக்க சொத்துக்களையும் சேர்த்து அந்த தாவா தாக்கல் செய்யப்பட்டதால்தான், தற்போது இந்த வழகதை வாதிகள் தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.1/2012 வழகில் காணப்படும் 14 இலக்க சொத்துக்களுக்கு வாதிகள் பாத்தியமானவர்கள் என்பதற்கு பட்டா உட்பட வருவாய் ஆவணங்கள் எல்லாம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அவை அனைத்தும் மோசடியாக தயாரிக்கப்பட்டவை.

3. இந்த தாவா சொத்துக்கள் அனைத்தும் மோளபிச்சி என்ற முத்தம்மாள் பெயரில் 1966ம் ஆண்டு கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.1/2012 ல் காட்டப்பட்டுள்ள 21 இலக்க சொத்துக்களில் 14 இலக்க சொத்துக்களான, இந்த தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.